## கதிராமத்தம்பி சிவபிரகாஸ்

41ம் நாள்

# அஞ்சலி "நினைவு மலர்"



**29-11-1998**

ILAMPIRAI OFFSET - MARUTHAMUNAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளித் தினத்தன்று தீயோன் மறைகையிலே
சுகமான ராகங்கள் சுவைகூட்டும் முன்னே
எறி குண்டொன்று எமனாக விழ
விதியின் விளையாட்டில் அமரத்துவமடைந்த
அருமை மகன், சிரேஷ்ட செல்வன்

# சிவபிரகாஸ்

மண்ணில்:

**1975**
**06**
**03**



விண்ணில்:

**1998**
**10**
**19**

வங்கி இலிகிதர் அவர்களின்

**41ம் நாள் கிரிகையின் போது**

குடும்பத்தினரதும், அன்புள்ளங்களினதும் நினைவலைகளைக் கொய்து அஞ்சலி "நினைவு மலராக" இன்று படைக்கின்றேன்.

இவன்,
ஆறாத்துயர்க்கடலில் அமிழ்ந்த
சின்னத்தம்பி-கதிராமத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை நிறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

*இருபத்தி நான்கு இளம் வயதில்*
*அகால மரணமடைந்து*
*அமரருலகு புகுந்து பெற்றோரை ஆறாத்துயரில் ஆழ்த்திய*

அமரர்
**கதிராமத்தம்பி - சிவபிரகாஸ் அவர்களின்**
(வங்கி இலிகிதர்)

***41*ம் நாள் வெளியிட்ட**

# அஞ்சலி "நினைவு மலர்"

"இந்திரா பவனம்"
காரைதீவு
29 - 11 - 1998.

*குடும்பப் பிரசுரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பது அதிஸ்ட்டம்; இறப்பதுதான் நியதி;

## இது பதினைந்து வருட கால செய்தி ;

அருட் சகோ. S.A.I. மத்தியூ (S.S.J) அதிபர், கமு/கார்மேல் பாத்திமாக் கல்லூரி.

குழந்தை ஒன்று பிறந்தது. அது தலைப்பேறான குழந்தை. அக்குழந்தை ஆண் மகவென்ற செய்தி பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் காதுகளில் விழுந்தபோது அவள் என்ன புளகாங்கிதம் அடைந்திருப்பாள். அடுத்து அந்தச் செய்தி தலைப்பேறு தலைமகன் எனத் தந்தையின் காதில் விழுந்தபோது அத்தந்தை எவ்வகை இன்பக் கடலில் ஆழ்ந்திருப்பார்! நாம் நினைத்துப் பார்க்கும் காலம் 03.06.1975.

காரைதீவை விட்டு கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் ஏழு ஆண்டுகால வாழ்வில் மூன்று ஆண்டுகள் மாணவத் தலைவராக அவன் விளங்கினான் என்ற செய்தியைத் தாங்கி அலையலையாக எழுந்த இன்பத் தணலில் உற்றார் உறவினர்கள் குளிர்காய்ந்த சம்பவத்திரட்டுக்களை தாயும், தந்தையும் சகோதர சகோதரிகளும் அசைபோட்ட தினங்களை எண்ணிப்பார்.

தமிழ்தினப் போட்டிகள், சாகித்திய விழா நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகளில் ஆண்மையும், வீரமும், கலையும், பேச்சும் கல்வியின் தகைமை காட்டி, கற்றலின் மேன்மை காட்டி, மனதில் உறுதியைக் காட்டி, வாழ்வில் உற்சாகத்தைக் காட்டியபோது அகமகிழ்ந்த அன்னை தந்தையரின் இன்ப எழுச்சிகளை எண்ணிப்பார்!

உயர்தர விஞ்ஞானப் பிரிவு கற்றலின்பின்பு இலட்சக் கணக்கானோர் வேலையற்றிருந்தபோது தலைநகரில் ஒரு வேலை - துறைமுகத்தில் அதுவும் உதவி முகாமையாளர் பணி - அதனை மனதால், மானசீகத்தால் நாளும் பொழுதும் மகிழ்ந்து கொண்டாடிய அன்னை தந்தையரின் எதிர்கால இலட்சியங்களை எண்ணிப்பார்!

துறைமுகம் கழிந்து ஊரருகே இன்னொரு துறைமுகம் - சம்மாந்துறை - பணி - மக்கள் வங்கி இலிகிதர். எதிர்கால எதிர்பார்ப்புக்கள் அதிகம். இந்த உவகையிலே திளைத்த நெஞ்சங்களின் நினைவு அலைகளை எண்ணிப்பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைத் தலைமைத்துவத்தின் பின்னணியில் சமூக சேவைப் பிணைப்பின் நேரடிப் பிரதிபலிப்பாக கல்லூரி விளையாட்டுத் துறையில் கண்ட அனுபவங்களை பிறரோடு பகிர்ந்துகொள்ள காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தில் அங்கத்தவனாகி பிறரையும் விளையாட்டு வீரர்களாக்கி அதிலே தம்முள்ளம் உவகைக் கடலில் மிதந்துவந்த மகிழ்ச்சிப் பெருக்கின் வெள்ள ஓட்டத்தை எண்ணிப்பார்!19.10.1998 நள்ளிரவு 10:35 சற்றேனும் எவரும் சிந்தித்துப் பார்க்காத நேரம். இசையின் கானத்தோடு காந்தர்வ கீதம் இசைத்த அந்த நேரத்திலா குண்டொன்று வரவேண்டும். அது சிவபிரகாஸின் உயிரைக் குடிக்கவேண்டுமா?

மகவொன்று பிறந்தது என்ற செய்தி கேட்ட செவிகள் இறந்துவிட்டான் மகன்; இனி வரமாட்டான் மைந்தன்; சேதி ஒன்றும் சொல்லாது சென்றுவிட்டான் தலைமகன்; இந்தச் செய்தி தாயின் காதுகளில் எப்படிப் புகுந்திருக்கும் என்று எண்ணிப்பார்!

சிங்கமெனவும் அதேவேளை சான்றோனாகவும் வளர்ந்துவிட்ட தனயன் பேச்சற்று விழுந்துவிட்டான் என்ற செய்திகேட்ட தந்தையின் குமுறலை எண்ணிப்பார்!

அண்ணன் மூத்தவன்; எதிர்காலத்தில் எமக்கு எல்லாம் செய்வார் என்று எண்ணியிருந்த அருமைச் சகோதரம் அறுவரும் இச்செய்தி கேட்டு எப்படித் துடித்திருப்பார்கள் என்று எண்ணிப்பார்!

வைத்தியசாலையில் உருவமே தெரியாது அங்கமெலாம் துளைக்கப்பட்டு இரத்தக் கறைகளுடன வைத்தியர்களே "ஐயோ" என அலறிப் பதைத்த காட்சியை உன் மனக்கண்முன் கொணர்ந்து அதை நீ எண்ணிப்பார்!

இன்பத்திலும், துன்பத்திலும் பங்குகொண்ட நண்பர்கள் தமது கூட்டத்தில் ஒரு பறவை கொல்லப்பட்டபோதும், அதன் பிரேதப் பாடையைச் சுமந்தபோதும் தங்கள் மனதினுள்ளும் சுமந்த சோகச் சுமைகளை ஒருமுறை எண்ணிப்பார்!

இழந்த உயிர் மீண்டும் வந்துவிடுமா? உனது கோழைத்தனத்தால், பொறாமையால், மனிதத்துவத்தை இழந்தமையால் குண்டொன்றை எறிவதற்கு எப்படி மனம் வந்தது என்று எண்ணிப்பார்!

குண்டுகளின் கலாசாரத்தை, துப்பாக்கி வேட்டுக்களின் புதிய முழக்கங்களைக் கொண்டுவந்து மனித உணர்ச்சிகளின் வேதனைகளை அழித்துவிட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டிய வயதினர் கொடும் கொலைகளுக்கு இலக்காவதைப் பார்த்துப் பரணிபாடும் சயங்கொண்டார்களைப் பார்த்து சற்று எண்ணிப் பார்க்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றோம்.

மரணச் செய்திகளை எழுதி எழுதி பணம் சம்பாதிக்கும் பேனாமுனைகளே எண்ணிப் பாருங்கள். ஆம்! உயிர்வாழ்வது இக்காலத்தில் அதிஸ்ட்டம்தான். எங்கே, எப்போது, இரவிலா, பகலிலா, குழந்தையை வயிற்றில் தாங்கும் போதா, அக்குழந்தையோடு இருக்கும்போதா, பிறர் பிணிதுடைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போதா என்று தெரியாத வேளையில் குண்டொன்று தாக்கக் காத்திருக்கிறது என்பதைச் சிந்திக்கும்போது உயிர் வாழ்வது அதிஸட்டம்தான்.

ஆட்சிச் சக்கரங்கள் ஒருபுறம் நீதிக்கு குரல்கொடுக்கின்றன. மறுபுறத்தில் சிவபிரகாஸகர்கள் பலியாகின்றனர். யார் கவலைப்படுகிறார்கள். ஒரு கவலை தீருமுன் மற்றொரு கவலை. நேற்றைய செய்தியின் பசுமையை அளிக்க வேறொரு செய்தி. நேற்று மறைந்துவிடுகிறது. இன்று நாளைய நிகழ்ச்சியில் மறந்துவிடுகிறது.

ஆனால்!
சின்னத்தம்பி கதிராமத்தம்பிக்கும் ஜோன் ஞானத்திற்கும் 19.10.1998 மறவாத தினம். அது இரவாத தினம். ஆனால், சிவபிரகாஸ் நீயோ நோவின் தன்மையை அறியாத சிவபிரகாசாய், சிவமயமாய் மாறிவிட்டாய்!

அருட் சகோதரர் **S.A.I.** மத்தியூ (S.S.J)
B.A. Dip-in-Ed. Dip-in-Theo.
Dip-in-Mgt.
M.Sc. - [Mgt.]
M.Ed.
Gold Medallist (SLAAED)
Vidiya Siromany (Hony)
Athipar Thilakam (Hony)
SLEAS - Class -I
Former Director General - Socity of the Joseph
Principal - Carmel Fatima College National School
All Island J.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூதவுடல் நீங்கினும்

## புகளுடல் நீங்கிடாத புதல்வனே சிவபிரகாஸ்

உலகிலே தோன்றியோர் எல்லோரும் மறைவதும் மறைந்தோர் எல்லோரும் தோன்றுவதும் உலக இயல்பு இதையே இந்து மதமும் கூறுகிறது. கதிராமத்தம்பி யோன் ஞானம்மாவுக்கும் மூத்தமகனாய் 03.06.75ம் திகதி அவதரித்த சிவபிரகாஸ் தனது 23ம் வயதிலே 19.10.98ல் பூவுலகை விட்டுச் சென்றது எவருக்கும் தாங்க முடியாத மாபெரும் கவலை. இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போல உன் கல்வி அறிவு கண்டு உற்றார் உறவினர் நண்பர்கள் உவந்தனர்.

கார்மேல் பாத்திமாவின் குழந்தையாய் ஆண்டு 6 தொடக்கம் 13ம் ஆண்டு விஞ்ஞானப் பிரிவு வரை கல்வி கற்று வெளியேறினாய். பாடசாலைக் காலங்களில் தமிழ் மொழித் தினப் போட்டியென்ன பேச்சுப் போட்டியென்ன விளையாட்டுப் போட்டியென்ன எல்லாவற்றுக்கும் உனக்கு நிகர் நீரே. சிறந்த விளையாட்டு வீரனாய் இருந்து கல்லூரிக்கு புகழைத் தேடித்தந்தாய். அதனாலோ என்னவோ காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் சாதனை வீரனானாய்.

மக்கள் வங்கி இலிகிதராய் கடமை ஏற்று 5 தம்பிமாரையும் ஒரு தங்கையையும் வாழவைக்க துடியாய்த் துடித்தாய். உன் எழில் வதனம் சிரிப்பது கண்டு இறைவனுக்கு பிடிக்கவில்லைப் போலும் உன் பெருமை கண்டு பொறாமை கொண்டவன் அகால வேளையில் உன்னை அழைத்துக் கொண்டானோ.

உனது ஆறு உதிரங்கள் சோர்ந்து அழ பெற்றவள் புலம்பி நிற்க தந்தை கலங்கி நிற்க எல்லோரையும் விட்டு விட்டு தன்னந்தனியாக மேலுலகம் சென்றாயோ. இப்புவிதனிலே உன் பூதவுடல் நீங்கினாலும் புகளுடல் என்றென்றும் நிலைக்கும். சிவபிரகாஸ் உன் பிரிவால் துயருறும் தாய் தந்தையர் உடன் பிறப்புக்கள் உற்றார், உறவினர் உன் ஒளி பெற்று பிரகாசமாய் வாழ இறையருள் பாலிக்கட்டும். உன் அமைதியான ஆன்மா சாந்தியடைய ஆராதிக்கின்றேன்.

- நன்றி -

வணக்கம்.

வே. கிருஷ்ணப்பிள்ளை (துணை அதிபர்)
கார்மேல் பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலை,
கல்முனை.

16-11-1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகால மரணமடைந்த எங்கள் சேவகன்

## கதிராமத்தம்பி - சிவபிரகாஸ் அவர்களுக்கு

**சம்மாந்துறை மக்கள் வங்கியின்**

# கண்ணீர் அஞ்சலி

கதிராமத்தம்பி ஜோன் ஞானம் தம்பதியின்
கதிரொளி, அருந்தவப் புதல்வ! சிவபிரகாஸ்!!
உனக்கு நிகழ்ந்த பயங்கர மரணத்தை
எமக்குள் ஏற்பதும் ஜீரணிப்பதும் எப்படி?
இதற்குள் ஏன் நீ மறைந்தாய்?
எப்போதும் எம்மொடு இணைந்து சேவையில்
ஓராண்டுக்குள் இதயங்கள் நிறைந்தாய்
சீரான வாழ்வில் திளைத்து வாழக்
கனவுகள் எத்தனை கண்டாய்? அறிவோமா?
மனங்கள் மாயுது சனங்கள் அழுதது.
இப்படி இறப்பு ஏனோ வந்தது?
அப்போது உன் மனம் பட்ட வேதனையை
உணர்வால், பாஷையால் காட்டி எழுத
எழுந்த பேனாவும் இணைந்தே அழுதது.
மணக்கும் வாழ்வை நாற்றமாய் மாற்றிய
கயவனின் செயலால் களத்தில் அணைந்தாய்!
விளையாட்டுத் திடலில் கனிந்த கானத்தில்
விழுந்த குண்டாலுன் உடலும் சாய
விதித்த செயலை விளம்ப முடியுமா?
உன்னை இழந்து துடிக்கும் பெற்றார்,
உடன் பிறப்புக்கள் உற்றார் உறவுகள்
ஊரார், நண்பர் எல்லாருக்கும்
ஆறுதல் தேறுதல் கூறுதல் தவிர
வேறென்ன செய்யலாம் மானிடர் நாங்கள்
உனது ஆன்மா நற்பேறடைய
இறைவனை வேண்டி எம் இதயம் கனிந்த
கண்ணீரால் உனை அஞ்சலிக்கின்றோம்
அன்புடை இதயத்து ஆன்மா சாந்தி பெறுக!

மக்கள் வங்கி,
சம்மாந்துறை
98.10.20

முகாமையார்களும்
ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அணையா விளக்கு அணைந்து விட்டது"

**"சைவப்புலவர் பண்டிதர் வி.ரி. செல்லத்துரை ஜே.பி. அவர்கள்**

கடந்த ஐப்பசி திங்கள் 19ஆம் நாள் (19-10-98) அகால மரணமடைந்து அமரராகிவிட்ட கதிராமத்தம்பி சிவபிரகாஷ் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். ஆறத்துயருற்றேன். இச்சம்வத்தினை எண்ணும் பொழுது. எனது நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருகியது. இவரைப் பால்யப் பருவமுதல் நன்றாக நான் அறிந்தவன். இவரது தந்தையார் சின்னத்தம்பி கதிராமத்தம்பியை ஏறத்தாள இருபது ஆண்டுகளாகத் தெரிந்து கொண்டவன். கெழுதகைமை மிக்க உழுவலன்பனாக அவருடன் பழகிக்கொண்டவன். திரு. சி. கதிராமத்தம்பி அவர்கள் பிரபல்யமான ஒரு வைத்தியர். இவரது தந்தையார். சின்னத்தம்பி அவர்கள் கிழக்கிலங்கையிலே புகழ் பூத்த வைத்தியர். மந்திரம் மாந்திரீகம் என்பவற்றில் கைதேர்ந்தவர். அன்றியும் கதிராமத்தம்பி அவர்களின் இல்லத் துணைவி யோண் ஞானம்மா அவர்கள் மன்னாரைப் பிறப்பிடமாகவும் ஆழிக்கடலின் அடித்தளத்திலிருந்து அடியார்க்கு அருள் செய்யும் பொருட்டு மீதெழுந்து வந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிந்தா யாத்திரைப் பிள்ளையார் அருள் பாலிக்கும் வீர முனையை புகுந்த இடமாகவும் கொண்டவர். இவரும் வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவரே. இத்தகைய வைத்தியப் பரம்பரையில் தோன்றியவரே அமரர் சிவபிரகாஸ் அவர்கள்.

திரு. சி. கதிராமத்தம்பி அவர்களுக்கும் யோன் ஞானம்மா அவர்களுக்கும் மூத்த புதல்வனாகப் பிறந்தவன்தான் சிவபிரகாஸ் அவர்கள். யான் வீரமுனை இ.கி.ச. வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் 1980ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். இவருக்குத் தலைதடவி ஏடு தொடக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சிவபிரகாசின் தந்தையார் திரு. சி. கதிராமத்தம்பி அவர்கள் நான்தான் இவருக்கு ஏடு தொடக்க வேண்டுமென்று பல முறை வினயமாக வேண்டிக் கொண்டதன் பலனாகவும், இறையருள் கைகூடியமையாலும் இந்நிகழ்வினை யான் நடத்தி வைத்தேன்.

பின்னர் சிவபிராகஸ் அவர்கள் வளர்பிறை அன்னநாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவும் வளர்ந்து கல்வியிலும் நிரம்பிய தேர்ச்சி பெற்றார். அவ்வேளையில் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பது போல் மனம்மிக மகிழ்வுற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனை இராம கிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின்னர் கல்முனைப் பாத்திமாக் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றார். தான் பெற்ற கல்வியின் பயனால் உயர்நிலை அடைந்து உயர் பதவி பெற்றார். கொழும்புத் துறைமுகத்தில் பிரதி முகாமையாளராகக் கடமையாற்றினார். இதன் பின்னர் சம்மாந்துறை மக்கள் வங்கிக் கிளையில் எழுதுவினைஞராகத் தொழில் புரிந்தார். இறப்பதற்கு முன்பும் இக்கடமையையே செய்து வந்தார். அத்துடன் சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய இடங்களிலுள்ள கல்வியகங்களில் க.பொ.த.ப. (சா/த), (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைப் போதித்து வந்தார். இவர் கேட்போரை கவர்ந்திழுக்கும் பேச்சுத் திறன் கொண்டவர்.

சிவபிரகாஸ் என்றால் "சிவஒளி" என்று பொருள் அணையா விளக்காக இருந்தவர் அணைந்து கொண்டார். "இவையெல்லாம் எப்பவோ முடிந்த கருமங்கள்". ஒரு பொல்லாப்புமில்லை. "எல்லாம் நன்மைக்கே" முழுதும் உண்மை என்று உபதேசித்த யோக சுவாமிகளின் கூற்றுப்படியும் நடக்கவேண்டியது நடந்துவிட்டது. அதற்காக வேதனைப்பட்டு நாம் அடையப் போவது ஒன்றுமில்லை. என்று கூறிய காட்கரி என்ற மராட்டிய கவிஞனின் போதனைப்படியும் நாம் மனந்தேறி ஆறுதல் பெறவேண்டியதுதான் நமக்குள்ள கடமை. எவர் எப்படிக் கூறினாலும் இவர்தன் மரணத்தினால் விட்டுச் சென்ற சுவடுகளை மறப்பதென்பது இலகுவில் முடிந்த காரியமுமல்ல.

கல்வி, சாமர்த்தியம், தன்னடக்கம், கீழ்படிவு கடமையுணர்வு அழகு அனைத்தும் ஒருங்கமைந்த ஒரு உருவம்தான் சிவபிரகாஸ் அவர் இன்று அமரராகி விட்டார். அவரது ஆத்ம சாந்தியடைவதாக என இறைவனை வேண்டி ஆறுதல் பெறுவோமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழக உறுப்பினர்

**கதிராமத்தம்பி சிவபிரகாஸ் அவர்களின் அகால மரணத்தையிட்டு**

*கழகம் வடிக்கும்*

# கண்ணீர் அஞ்சலி

மருதமும் நெய்தலும் மருவிநின்று வளம்சேர்க்க
கருணையும் கரையில்லா பேரன்பும் துணைநிற்க
மருத்துவர் கதிராமத்தம்பி ஜோன்ஞானம் தம்பதியினருக்கு
வளர்பெரு சிரேஸ்ட மகனாய் உதித்தவன் நீயன்றோ!

குடும்பத்திற்கு தலைமகனாய் குடிவழியிற் சிறந்தவனாய்
வடுபல நீக்கி கண்டவர் களிப்புற உறவாடி
சடுதிப் பொழுதினிலே காலனுக்கு உதவிக்கரம் நீட்டி
விடுதலை வேண்டி விரைந்து சென்றதும் ஏனோ?

மின்னி மறைந்த இருளிலே கண்டது
வன்மை கொண்ட நெஞ்சத்தாரும் வெந்துருக
பின்னிக் கிடந்த சோதரர்களின் இதயங்களை
மின்னலடிக்க வைத்துச் சென்றதும் ஏனோ?

கசடு நீங்கிட உயர் கல்வியில் உரம் பெற்று
அரச பணியிலே மக்கள் வங்கி இலிகிதராய் உயர்ந்து
திறனுடன் பணியாற்றி செம்மை காண்கையில்
உறவுகள் உன்னுடன் கொண்டிட காலனும் வந்ததேனோ?

விவேகானந்தா விளையாட்டுக் கழகம்
காரைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை ஸ்டார் கல்வி நிலைய (க.பொ.த.) சாதாரண தர மாணவர்கள்

**கதிர்காமத்தம்பி சிவப்பிரகாஸ்அவர்களின்**

*அகால மரணத்தையிட்டு வடிக்கும்*

# கண்ணீர் அஞ்சலி

விழிக் குடத்தில்
நீர் சுமந்த எங்கள் விளை நிலமே...
அன்பின் தோழமையே!
கே. சிவபிரகாஸ் ஆசிரியரே
இரும்பைத் தூரமாக்கி
பாடங்களால் பாரமாகி
புத்தகங்களுக்குள் புழுவாகி
ஊர்ந்து கொண்டிருக்கும்
உன் ஸ்டார் கல்வி நிலைய மாணவர்களின
ஏக்க எழுத்துக்கள்
உன் வாசலை நோக்கி
கவிதைகளாய்!

உன்னுடைய ஆழ்ந்த அறிவை
மாணவர்கள் பெற வேண்டுமென்று
வறுமையில் பெருமையாய்
உன் வாழ்வை எங்களுக்காக
பத்திரப்படுத்தினாய்!
ஏழ்மையில் தாழ்மை
இன்பத்தில் நிதானம்
துன்பத்தில் பொறுமை
எங்களுக்கு நீ கற்றுத்தந்த
வாழ்க்கைத் தத்துவங்கள்.

வாழ்க்கை என்பதை
தேடல் தான் என்றாய்...
இழந்த உன்னை நாங்கள்
எங்கே தேடுவது?

சாதி மத பேதமின்றி
சகலரையும் சமமாக கருதினீர்
மாணவர்களின் உள்ளங்களில்
மானிடராக குடியிருக்கும்
எங்கள் ஆசிரியரே!
உன்னைப்போல் ஓர் உத்தமன்
இன்னும் பிறப்பானா?

கதிராமத்தம்பி ஜோன்ஞானம் குடும்பத்தார்
துடித்து வெந்துருக
உன்னை நம்பிய மாணவர்கள் கண் கலங்க
எல்லோரையும் வேதனையில் ஆழ்த்தி
நேரத்தோடு உன் இடத்தைப்
பிடித்து விட்டீர்.

எங்கள் மதிப்பிற்குரிய ஆசானே!
உன் அறிவுக் கிணற்றை
எங்களுக்காக இறைத்து இறைத்தே
வற்றிப் போனீர்களா?

கரைசேர வந்த மாணவர்களை
கரையேற்ற முயற்சி செய்தீர்கள்
இங்கே சோர்ந்து கிடக்கும்
உங்கள் மாணவர்களாகிய
எங்களின் உள்ளங்களில் எழும்
சந்தேகங்களை யார் தீர்ப்பது?

இறுதி வகுப்பில்
தந்த வினாவிற்கு விடை காணுமுன்
மண் மறைந்து விட்டாய்
உன் வினாவின் விடையை
யாரிடம் இனிக் காட்டுவது
எங்கள் ஆசானே!

ஒரு நாளா இரு நாளா
வருடக் கணக்கில்
எங்கள் கல்வியின் முன்னணியில்
உற்சாகம் காட்டிய
உத்தமர் அல்லவா நீ
உன்னை இம் மாணவர்கள்
எவ்வாறு மறப்பார்கள்?

ஆசானாக மட்டுமன்றி
அரச பணியிலே
மக்கள் வங்கி இலிகிதராய்
திறமையாக செயலாற்றி
வருகையில்
மண் மறைந்து விட்டதும்
ஏனோ?!

அன்பு கொண்ட உற்றாரினதும்
வெந்துருக
பின்னிக் கிடந்த உன் ஐந்து
சோதரர்களினதும்
இதயங்களை
மின்னலடிக்க வைத்து
மண் மறைந்ததும் ஏனோ?

*உன் ஆத்மா சாந்தியடைய*
*எங்கள் பிரார்த்தனைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபிரகாசின் இறுதி சில மணித்தியாலங்கள்...

19-10-98, அன்று, மாலை 6,30 மணி இருக்கும் காரைதீவுக்குள் இருந்து கல்முனைக்கு வந்து என்னை, அழைத்து , கல்முனையிலிருந்து காரை தீவை நோக்கி என் நண்பன் பிரகாஸின் மோட்டார் சைக்கிள், சக்கரங்கள் வேகமாக சுழல ஆரம்பித்தன, அத்தோடு சிவபிரகாசும் தனது மரணத்தை நோக்கிய தீர்க்கமான பயணத்தை ஆரம்பித்து இருந்தான், காரைதீவு இருந்து அவரின் வீட்டிற்கு சென்று பின் கிருஸ்ணப்பிள்ளை அதிபர் வீட்டிற்குச் சென்று, அங்கு பாடகர் அன்டன் தேவசகாயம் இசைக்குழு உறுப்பினர் ஆகியோரிடம், உரையாடினான் பிரகாஸ். இசைக்குழுத் தலைவர் சிவா அண்ணனை சந்திக்க வேண்டும் என்று, காரைதீவு விளையாட்டு அரங்கிட்கு தானும் பிரகாசும் சென்றோம், அங்கு சிவா அண்ணன் இல்லை. அந்த அலங்கரிக்கப்பட்ட மேடையிலே சிவபிரகாஸ் ஏறி ஒலிவாங்கியின் முன்னின்று தனது வெண்கல குரலால் அழகாக. பார்வையாளர்களுக்கு அறிவிப்பு செய்தார். அதைப்பார்த்து, மகிழ்ச்சி அடைந்தேன்.

பின்னர் மேடையிலே இருந்து இறங்கிய சிவபிரகாஸ் என்னையும் அழைத்து கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் இன்னுமொரு வீட்டிற்கு கூட்டிச்சென்றான் அந்தநேரம் சரியாக இரவு மணி 8.00 இருக்கும். அங்கு பாடகர். சிறிதர்பிச்சையப்பா, நிலாமதிப்பிச்சையப்பா, பாடகி, நிலக்சி, நிலக்சியின் தந்தை ஜெயவீரசிங்கன் ஆகியோர் இருந்தனர். எல்லோருக்கும் நண்பன் சிவபிரகாசை நன்கு தெரியும். அவர்களோடு உரையாடிக்கொண்டிருந்தான், நானும் பக்கத்தில் இருந்தேன் அவ்வேளையில் நண்பன் சிவபிரகாஸிடம் ஜெயவீரசிங்கம் கேட்கிறார் "தம்பி நிகழ்ச்சிக்கு படையினர் பாதுகாப்பு வளங்குவார்களா" என்று கேட்க சிவபிரகாஸ் சொல்கிறார் அப்படி ஒன்றும் தேவையில்லை காரைதீவை நீங்கள் முற்று முழுதாக நம்பலாம் என்றான். அதே வாக்கு பொய் என்பதற்கு பின்பு சிவபிரகாஸ்சும் ஒரு சாட்சியாகிவிட்டான்.

பின்னர் 9,15 மணி இருக்கும் அருவரும் மைதானத்தை அடைந்தோம். பின்பு 10. மணியளவில், மேடையிலே இசை நிகழ்ச்சி ஆரம்பமானது ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மேடையின் முன்புறமும் பாடகர்களுக்கு மட்டும் பின்புறம் கதிரைகள் போடப்பட்டது. அப்போது நானும் பிரகாசும், கழக முக்கியஸ்த்தர்களும் பாடகர்களும் கதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது கூட கழியும் ஒவ்வொரு வினாடியும் தனது ஆயுள்குறைந்து கொண்டு வருவதையும், தனது மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதையும் அறியாதவனாக சிவபிரகாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரிடமும் சிரித்து பேசிக்கொண்டிருந்தான், அதே போலவே அவனின் சகோதரர்களும், தன் கூட்டிலே ஒரு குருவி பிரியப்போவதை அறியாதவர்களாய் மைதானத்தில் ஆங்காங்கு நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார்கள். முதல் பாடலை அன்டன் தேவசகாயம் "ரகுபதி ராகவ ராஜாராம்" என்ற பாடலை பாடிமுடித்தார் பின்னர். அது முடிந்ததும், மைதானத்திலே சனக்கூட்டம் பாடலை ரசித்துக் கொண்டனர். பின்னர் நான் அவ்விடத்தை விட்டு, 35அடித் தூரத்தில் வேறு ஒரு இடத்தில் சனக் கூட்டத்திற்குள் அமர்ந்திருந்தேன்.

இரண்டாவது பாடலைப் பாட மேடையிலே நிலாமதிப் பிச்சையப்பா வந்து பூப்பூக்கும் ஆசை அதைக்கேட்கத்தான் ஆசை என்ற பாடலைப் பாட பார்வையாளர்கள் எல்லோரும் ரசித்து மெய்மறந்திருந்தனர். நேரம் 10.30 மணியை தாண்டியிருக்கும் அம்மேடையின் பின்புறத்திலே எதிர் பாராத விதமாக "டமார்" என்று பாரியசத்தம் கேட்டது. எல்லோரும் ஓடுகிறார்கள், ஒரு பெண் "ஐயோ" சபம் ,சபம் என்று அலறிய சத்தத்தில், நான் என்னையே மறந்து செயலிளந்து ஸ்தம்பித்து போனேன் இவையாவும் 15 செக்கன் நேர அளவில் நடந்த முடிந்விட்டது. நான் ஓடிச்சென்றேன் வாகனத்தில் ஏற்றும் போது பார்க்கமுடியாமல் போய்விட்டது அவ்வளவிற்கு சனக்கூட்டம் நான் என்ன செய்வது. பிரகாசின் சகோதரர்களும், கழக முக்கியஸ்தர்களும், டாக்டர். பரமானந்தமும் சிவபிரகாஸை கல்முனை வைத்தியசாலை கொண்டு சென்றுவிட்டனர், சிறு காயங்கள்தான் என்றனர் அருகில் இருந்தவர்கள். மறுநாள் அதிகாலையில் கல்முனைக்குச் சென்ற பிறகுதான் அவன் என் நண்பன் சிவபிரகாஸ் இறந்து விட்டான் என்பதை அறிந்தேன், அன்று .இசை நிகழ்வின் போது புகைப்படம் எடுக்க தயாராக இருந்த கமரா மறுநாள் அவனது மரணப்படுக்கை காட்சிகளை தன்னுள்நிரப்பிக்கொண்டது. நான் என்ன செய்வேன் ! என்நண்பன் சிவபிரகாஸ் அடிக்கடி சொல்லிக் கொள்ளும் வார்த்தை "நன்றாக வாழவேண்டும்" ஆனால் முடியவில்லை. அவனது வாழ்க்கையில் விதி மிக அழகாகவும் நுட்பமாகவும் விளையாடி அவனை தோற்கடித்துவிட்டது.

தனது நினைவிற்காக அவன் விட்டுச்சென்ற தடயங்கள் ஏராளம் எனினும் காலத்தின் நகர்வில் சுயமிளக்கும் நினைவுகளின் உற்றார், உறவினர், குடும்பத்தவர்களுக்கு நினையான இந்த இறுதி மணித்தியாலையம் இருக்கட்டும், நண்பா! "உனது ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனை வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற உன்வார்த்தை ஞாபகம் வாழ்நாளாய் வந்த வாழ்வின் வந்து போன இனிய நாட்கள் இனிதானவை

*நீண்ட காலம் நெருங்கிய நண்பன்* **D. S.** லாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகால மரணத்தால் அமரத்துவம் பெற்றுய்த*

**கதிராமத்தம்பி சிவப்பிரகாஸ்** (வங்கி இலிகிதர்)

*அவர்களுக்கு அன்பன் மனோகரன் சிந்திய*

# இரங்கற்பா

பூவுலகில் மாணிடர் பூத்துப்பொலிவதும்
ஊருலகில் உதிர்வதும் உலகயில்பு எனினும்
பாருலகில் பண்பாளன் மகிமையுறு மதிவாணன்
மேவும் உயர் சிவபிரகாஸ் சென்றதென்ன மாயமையா
மருத்துவம் விளங்கும் சிவத்தம்பி சின்னத்தம்பி
அரசியல் அரங்கிலும் அறிவிலும் விளங்கும்
கதிராமத்தம்பியின் கலங்கரைவிளக்காய்
அன்பும் அறனும் அகலா அருள்ஞானம்
முந்திய வினையால் முகிழ்ந்த மூத்தவனாய்
சிந்தும் கண்ணீரக்கு இலக்கான சிவபிரகாஸ்
சிறு வயதில் சென்றதென்ன மாயமையா

சுகமான இராகத்தை இதமாக அனுபவிக்க
மிதமான கூட்டம் விளங்கிடும் தீபா வளியில்
கத கதக்கும் கண்ணீரை நாம் வழித்துநிற்க
பதமான மௌனத்தில் மறைந்ததென்ன மாயமையா
சின்ன வயதில் சிறப்பாகக் கற்றுயர்ந்து
வண்ணவடிவில் வனப்பான உடல் பெற்று
எண்ணங்களால் கூடுகட்டி உன்னை
எடுப்பான மகனாக்க ஈன்றெடுத்த பெற்றோர்
எய்திருந்த மனக்கோலம் மண்மேடாய்மாற
சன்னங்களால் துளையுண்டு உன்னுடல் சாய்ந்தோய
சதிசெய்த மாயமென்ன விதி வழியோ சிவபிரகாஸ்
வங்கி வழி நின்று வழிசமைப்பான் அண்ணன் என
ஏங்கிய உதிரங்கள் ஆறும் ஆறாக கண்ணீர்விட
ஊன்உடல் இரத்தத்தை ஓயாது உவந்தளித்து
அரை இருளில் ஓய்ந்து விட்ட மர்மமென்ன

மகிழ்திருந்தார் உன்தந்தை மணக்கோலம் பார்ப்பதற்கு
விதி விட்ட கிரகங்கள் சதி செய்யுமோ என
விரும்பும் தெய்வங்களை பகல் இரவாய் வேண்டிநிற்க நீயோ
அவரை வேரறுந்த மரமாக்கி விண்ணுலகம் விரைந்தாயே
உன் இழப்பை தந்தையால் ஈடு செய்ய முடியாது
விம்மியழும் மாணவர்களின் விஞ்ஞான தாகம் தீராது
சேர்ந்து அழும் அன்பர் கூட்டம் துயரைத்தாங்காது
பந்தங்கள் பதறியழ பரமபிதாவிடம் சென்றாயே.

*காரைதீவு,*
*19-10-1998*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் வருவார் ?

விஞ்ஞானப் பயிரை
விருப்புடன் விளைவித்து
உற்சாகத்துடன் எம்மனதில்
உரமூட்டி - பரீட்சை எனும்
அறுவடை நேரத்தில்- எம்மை
பிரிந்தது நியாயமோ. ?

ஐன்ஸ்ரீனின் அனுகுண்டையும்
ஐசாக் நியுட்டனின் அப்பிளையும்
உங்களிடம் இருந்தல்லவா
அறிந்து கொண்டோம்.

ஆவர்த்தன அட்டவணையின்
ஆங்கில சொற்களும்
தாக்கத் தொடரின்
தாக்கங்களும்
இதயத்தின் துடிப்பும்
இரத்தத்தின் வகையும்........

இன்றும் நாங்கள்
மறக்கவில்லை - உங்கள்
கனிவான கற்பித்தலால் - ஆனால்
நீங்கள் மறந்து விட்டீர்கள்
அதனால்தான்--
எம்மைவிட்டு பிரிந்து விட்டீர்கள்.

தீபத் திருநாளில்
தீயவர்களின் தீப் பிளம்புகள்
உங்கள் உடலைப்
பதம் பார்த்த செய்தி கேட்டு
உருகியதே எங்கள் உள்ளம்

அரசாங்கப் பரீட்சையில் -- எங்கள்
அனைவருக்கும்
விஞ்ஞானத்தில்
அதி விஷேட சித்தி --இது
உங்கள் சபதமல்லவா.
இப்போது
நட்டாற்றில் நாங்கள்
ஆயிரம் ஆசிரியர்கள் வரலாம்
ஆனால்---
உங்களைப்போல் யார் வருவார் ?
விஞ்ஞானத்தை விருப்புடன் கற்கிக்க.

மெகாவின் மாணவர்கள
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல்கள்

பிள்ளைக் கலிதீர பிறந்த பிரகாஸே உன்
கிள்ளை மொழியினிலே என் சித்தமெலாம் நீயானாய்
அள்ளி அணைக்கையிலே
ஆசைமுத்தம் தந்து ஆவி குளிரச் செய்தாய்
முற்பிறப்பு வினையோ மகனே
முடிந்த முடிவும் இது தானோ
இப் புவியில் என் நெஞ்சம்
இதனைத் தாங்குமோ என் மகனே -தந்தை-

மூத்த செல்வமாய்ப் பிறந்து
முடிவில்லா இன்பம் தந்து
மார் மேலும் தோள் மேலும்
தூங்கி இன்பம் தந்த பிரகாஸே
அழகான மகனாகி அறிவில் சிறந்து
என் உள்ளம் குளிர்கையில்
நீ ஓடி மறைந்தது உதிரம் துடிக்கிறதே
உன் மண நாளைக்காண மகனே
மகிழ்வோடு இருந்தேனே
நீ பிணமாக வந்தப்போ என்
பேதை மனம் தாங்கிடுமோ -தாய்-

உற்றாரும் மற்றோரும் உனைப் போற்றிப் புகழ்பாட
நாங்கள் கற்று உய்யும் வழி அமைப்பாய்
வற்றாத உன் அறிவு செல்வம் எம்மை வளமாக்கும்
ஊற்றாக இருக்கும் எனக் கனவு காண்கையிலே
பற்றறுத்துச் சென்றது அண்ணா பரம் பொருளின் கட்டளையோ -சகோதரர்கள்-

கண்ணை இமைகாப்பது போல் என்னைக் காத்து
கற்பித்து எழிலாக வாழவைப்பாய் என நான்
எண்ணி வளர்கையிலே எம்மை ஏங்கவைத்து
எமைப்பிரி தல் துயரம் சொல்லில் அடங்குமா அண்ணா
தொடர் துயரம் இப்பிறப்பில் சோகம் தானே -சகோதரி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகின்றார்கள் Mega வின் மாணவர்கள்

கதிராமத்தம்பிக்கும்
ஞானத்திருமகளுக்கும்
உத்தமராய் உதிர்த்த
சிவபிரகாஷ்.

பண்பானவனாய் பழகி ~ தன்
அன்பாலே மாணவரை வென்று
கடமையிலே கண்ணென்று மதித்த
ஆசானை இழந்த துயரில்
அழுகிறார்கள்
Mega வின் மாணவர்கள்

சந்தேகம் என்றாலே
சாக்கு போக்கு சொல்லும்
ஆசிரியர் மத்தியில்
சாதுரியாய் நிவர்த்தி
செய்த சான்றோனை
இழந்த துயரில்
அழுகின்றனர்
Mega வின் மாணவர்கள்

சாப்பிட்டு தூங்கும்
நடுப்பகலில் கூட
ஓய்வில்லாமல் எங்களிடம்
வந்து சயன்ஸ் படித்த

சத்தியவானை நினைத்து
அழுகின்றார்கள்
Mega வின் மாணவர்கள்

உன்னிடம் வந்த பிள்ளை
விஞ்ஞானம் விளங்கவில்லை
என்று திரும்பிச் செல்லவில்லை
என்பது வியப்பல்லவா.
தீபத்திருநாளில் தீயவர்களின்
தீப்பிளம்புகள்
உன்னையல்லவா உரிமை
யாக்கி கொண்டது
செய்தி கேட்டு எங்கள்
உள்ளமெல்லாம் உருகியதே........

விஞ்ஞானத்தை வியப்புடன்
பிரகாசிக்கச் செய்த
சிவபிரகாஸை
இளம்வயதிலல்லவா இறைவன்
இன்புடன் இணைத்துக் கொண்டார்.

ஓ .......................
பிரகாஸ் உன் ஆத்மா
சாந்தியடைய இந்த கண்ணீர்க்
கவிதையை காணிக்கையாக்குகின்றோம்.

மெகா கல்வியகம்,
சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணி

திரு. கதிராமத்தம்பி சிவபிரகாஸ் தீபாவளித் திருநாளன்று (19-10-1998) குண்டுவெடி விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் தந்துவிட்டது.

தம்பி சிவபிரகாஸை சிறுவயதிலிருந்தே அறிவேன். துடிப்புள்ள, நற்பண்புள்ள இளவல் அவன். அவர் பெற்றோரையும், குடும்பத்தவர்களையும் நன்கு அறிவேன். தந்தை செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த காலம் முதல் இலட்சியப் பற்றுடன் ஆதரித்து வந்த குடும்பத்துப் பிள்ளை சிவபிரகாஸ். அத்துடன் நாட்டு மற்றும் சித்த மருத்துவத்தில் கைதேர்ந்த குடும்பத்துப்பிள்ளை சிவபிரகாஸ்.

அவர் தந்தை கதிராமத்தம்பி தமிழரசுக் கட்சியின் முன்னணி ஊழியர். இலட்சியப் பற்றும், கொள்கைப்பற்றும் கொண்டவர். இன மோதல்களினால், ஆயுதக் கலாச்சாரத்தினால் திரு. கதிராமத்தம்பியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட வேளையிலும்கூட, வறுமையில் வாடிய பொழுதிலும்கூட கட்சிப்பணியை மறந்திடாமல் துணிச்சலுடன் இளவலாக முன்னணிவகித்த தலைமகன் சிவபிரகாஸ் வன்முறைக்குப் பலியாகிவிட்டதுதான் பரிதாபத்திற்குரியது.

தம்பி சிவபிரகாஸ் கல்வியில் சிறந்து விளங்கியிருந்தார். எமது இயக்கப் பாசறையில் வளர்ந்தவர். வங்கித்துறையில் ஊழியராகக் கடமையாற்றியவர். இசைப்பிரியர். அதனாற்றான் அந்த இசை நிகழ்ச்சியில் பங்குகொண்டிருக்க வேண்டும். தன் குடும்பத்தைக் காப்பாற்ற உழைக்க வேண்டிய தலைமகன் தன்னை இழந்துவிட்டான். எந்த இசையால் கவரப்பட்டிருந்தானோ அந்த இசைபாடிய குயில்களையும் இறுதிவரை காப்பாற்ற முயற்சித்து மடிந்துபோனான். இசையின் இனிமையில் திளைத்திருந்த மக்கள், வன்முறையின் கொடூரத்திற்குப் பலியாகியுள்ளனர்.

தம்பி சிவபிராகஸ் இழப்பினால் வாடும் அவர் குடும்பத்தினரின் துயரத்தில், அனுதாபிகளின் துக்கத்தில் எம் வேதனைகளையும் கலந்து பங்குகொள்கிறோம். எம் வீட்டுப் பிள்ளையை இழந்து நிற்கிறோம். எம் இதயம் பொங்கிடும் கண்ணீர் அஞ்சலியை அர்ப்பணித்து நிற்கிறோம்.

மாவை. சோ. சேனாதிராசா,
முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்.
தமிழர் விடுதலைக் கூட்டணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நாள் நினைவை முன்னிட்டு

**கண்ணீரில் நாம் வாட**
**காலன் உன்னை கவர்ந்து சென்றானே!**

அப்பலோ டியூட்டரியில்
அருமையாய் கற்பித்த ஆசானே சிவ பிரகாஸ்

உன் அன்பு முகம் காணத் துடிக்கின்றோம்
மீண்டும் ஒரு தடவை இங்கு வரமாட்டாயா?

தாயாரும் கதறியழ தந்தையார் சோர்ந்துவிழ
சோகத்தில் நாம் வாழ தனியாகச் சென்றாயே!

ஆசானே எம்மைத் தவிக்க விட்டுச் சென்றாயே!

நீங்கள் கல்வி மட்டுமா புகட்டினீர்கள்?
ஒழுங்கு பண்பையும் புகட்டினீர்களே!

காரை நகரிலே சுகமான ராகம் பார்க்க
கருதி நீ சென்றாயோ?
அங்கே காலன் உன்னை அழைக்க
கான மழையுடன் கலந்துதான் மறைந்தாயோ?

ஆசானே அன்று ரோஜா மலர் போல்
புன்னகை சிரிப்புடன்
மாணவர்களுக்கு அருமையாய் கற்பித்தாய்
இன்று கண்ணீரில் நாம் வாட
காலன் உன்னைக் கவர்ந்துதான் சென்றானோ?

ஆனானே! நீங்கள் எங்களை விட்டு
பிரிந்து தொடர்ந்து எங்கள் அப்பலோ
ரியூட்டரியும் அழுகிறது.

ஆசானே! நீ இறந்தது எங்கள் எல்லோருக்கும்
பாரிய இழப்பு யாம் என்ன செய்வோம்?
எங்கேதான் காணப்போகிறோம்?

*இவ்வண்ணம்*
அப்பலோ ரியூட்டரி உரிமையாளர்
ஆசிரியர்கள், மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிக்கும் விழிநீர் அஞ்சலி

கதிராமத்தம்பி சிவபிரகாஸ்

எமை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயிலில் மின்னலென மறைந்து விட்ட
கதிராமத்தம்பியின் குலக்கொழுந்தே சிவபிரகாஸ்
நீ மண் மறைந்து போனாலும் மனதினிலே நிறைந்துவிட்டாய்.

மனித நேயம் போற்றும் மருத்துவரின் மகனே
மக்கள் வங்கிதனிலே பணிபுரிந்தாய் நலமே
காலனவன் கையில் சிறைப்பட்டாய் வெண்புறாவாய்
காலமெல்லாம் உம்நினைவு நிழலாடும் எம் மனதில்.

மரியாளின் பெயர்கொண்ட மாணவர் விடுதி வந்தாய்
மறுப்பின்றி பண்புடனே கல்வியதைக் கற்பித்தாய்
புனிதரின் திருச்சுருபம் புகலிடமாய் உவந்தளித்தாய்
புண்ணியனாய் புவிவிட்டு பரகதிக்குச் சென்றுவிட்டாய்.

மாதமொன்று மறைந்தாலும்
மறையாது உம் நினைவு
இரு கரங்கள் யாம் குவித்தே
இறையவனை ஏறெடுத்து
இறைஞ்சுகின்றோம்
உம் ஆத்மா அமைதி பெற.

அருட் சகோதரர். தேவறாஜ் (S.S.J.) (தயா)
மற்றும் மாணவர்கள்
புனித மரியாள் ஆண்கள் விடுதி
பாண்டிருப்பு
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பொன்னேடும் பூவையோடும் புகழோடு, பூத்துப் பொலிந்து மங்கா நிலவாக என்மகன் வாழவேண்டிய இளம் வயதில் விதியின் கொடுமையால் நாங்கள் வேரறுந்து எங்கள் கண்ணீர்க் கடலில் உங்கள் கண்ணீரையும் சங்கமம் செய்த, சொந்த பந்தங்களே, ஆறத்துயைரை அணைக்க இதயத்தை பிழிந்து பாவாக்கி பாடலை கண்ணீராக்கிய நண்பரே! கண்ணீர் அஞ்சலி விதைத்த விவேகானந்த விளையாட்டுக் கழகத்தினரே! இணைந்த சேவை ஓராண்டிற்குள் நண்பரின் மரணத்தை ஜீரணிக்க முடியாது இதயம் கனிந்த கண்ணீரால் அஞ்சலித்த சம்மாந்துறை மக்கள் வங்கியினரே! சம்மாந்துறை ஸ்டார் ரியூட்டரியை வழிநடாத்தும் எம் ஆசான் சிவபிரகாஸ் என இரங்கலுரை நிகழத்திய உவைஸ் அவர்களிட்கும் அனுதாபங்களை வழங்கிய மெகா சாய்ந்தமருது, கல்முனை அப்பலோ ஐ, எல், ரீ, கொழும்பு ஆகிய கல்வியகங்கட்கும், அனைத்து மாணவர்களுக்கும் ஆத்மா சாந்திக்கு அஞ்சலித்த மதிப்புக்குரிய கார்மேல் பாத்திமாக் கல்லூரி அதிபர் அருட் சகோதரர். மத்தியூ, அவர்கட்கும், மற்றும், இராமகிருஸ்ண மிசன் பாடசாலை கல்முனை அதிபர் திரு, என், நாகராஜா அவர்கட்கும், மற்றும் மாணவர்கட்கும், இறுதியாத்திரையின் போது இறை சிவம் செய்த தம்பி குணரெட்ணம் அவர்களுக்கும், மற்றும் துனை நின்றவர்களுக்கும் சிரமம்பாராது பல மைல் தூரம் இருந்து வந்த உத்தியோகத்தினருக்கும் உயர் அதிகாரிகளுக்கும், அஞ்சலித்த அனைவருக்கும், மற்றும், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ சகோதர்களுக்கும், என் மக்களின் நண்பர்களுக்கும் துன்பத்தில் கலந்துகொண்டு மலர்வளையம் நல்கிய மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கியினர்களுக்கும் அனுதாப தந்திகளை அனுப்பிய த.வி. கூட்டணிச் செயலாளர் நாயகம், தலைவர், மற்றும் நாடாளுமண்ற உறுப்பினர்கள் தொண்டர்கள், காரைதீவு சகோதரர்கள், அனைவருக்கும் இதயத்தால் நன்றி அறிதலை நவில்கிறேன்.

நெஞ்சில் எழும்கனவால் துடிக்கும்
சி. கதிராமத்தம்பி (வைத்தியர்)

காரைதீவு,
29-11-1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org